Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No STC.NO.478/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகம் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சுப்பராயன் | தொழில் | தலைமை காவலர், |
| கிராமம் | ஜோலார்பேட்டை | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 07 day of January 2025.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்து வருகிறேன். 31.03.2022 அன்று முதல் நிலை காவலராக ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் பணி செய்து கொண்டிருந்ததேன். அப்போது SI சீனிவாசன் உடன் முதல் நிலை காவலர் 547 மூவேந்தன் மற்றும் நான் கோடியூரில் உள்ள சிதம்பரம் என்பவரின் வீட்டிடம் சென்று காத்துக்கொண்டிருந்தோம். அப்போது காலை சுமார் 10.30 மணியளவில் சிதம்பரம் என்பவரை அழைத்து விசாரித்தார். சிதம்பரத்தில் கையில் ஒரு கவர் இருந்தது. அப்போது உதவி ஆய்வாளர் சிதம்பரத்தை விசாரித்தபோது எதிரி சிதம்பரத்தின் கையில் இருந்த கவரில் கஞ்ச எனும் போதை பொருள் 200 கிராம் அளவிற்கு இருந்தது. இதுசம்பந்தமாக 11.00 மணியளவில் கைப்பற்றுதல் மகசர் மூலம் எதிரியிடம் இருந்து மேற்படி கஞ்சாவினை கைப்பற்றி அதில் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். என்னுடன் முதல் நிலை காவலர் 547 மூவேந்தன் என்பவரும் அதில் கையொப்பம் செய்தார். அதில் உள்ள 1-வது கையொப்பம் என்னுயதுதான். கைப்பற்றப்பட்ட 200 கிராம் கஞ்சாவில் இருந்து 25 கிராம் கஞ்சா மாதிரி 2 எடுக்கப்பட்டது. இது சம்பந்தமாக எதிரியை கைது செய்து காவல் நிலையத்திற்கு 01.30 மணிக்கு அழைத்து வந்தார். எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம்

முறையே அ.சா.ஆ.3 மற்றும 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எந்த நேரத்தில் தகவல் கிடைத்ததாக உதவி ஆய்வாளர் சொன்னார் என்றால் நேரம் சொல்லவில்லை. கோடியூருக்கு ஒரு தகவல் சம்பந்தமாக விசாரணைக்கு செல்ல வேண்டும் என்று சொன்னார். முதல் தகவல் அறிக்கையில் 31.03.2022 அன்று 13.30 மணிக்கு தான் தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு கிமீ என்றால் 1–ல் இருந்து 1.5 கிமீ இருக்கும். காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு எதன் மூலம் சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் அவருடைய இருசக்கர வாகனத்தில் நானும் மூவேந்தரும் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றோம். நாங்கள் மூவரும் எந்த உடையில் சென்றோம் என்றால் சீருடையில் சென்றோம். நாங்கள் சென்ற இடம் மக்கள் நிறைந்த இடம் என்றால் சரிதான். அந்த இடத்திற்கு சென்ற பிறகு எதிரியை முதலில் யார் பார்த்தார்கள் என்றால் எதிரியின் வீட்டின் பின்புறம் அழைத்து உதவி ஆய்வாளர் விசாரித்தோம். இந்த விவரத்தை என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அவர் கேட்கவில்லை அதனால் நான் சொல்லவில்லை. எதிரியை நாங்கள் விசாரித்தபோது அவர் எந்த இடத்தில் இருந்து பொருளை எடுத்துக் கொடுத்தார் என்றால் அவர் கையிலேயே வைத்திருந்தார். அந்த பொருளை எந்த கடையில் எடை போட்டோம் என்றால் நியாபகம் இல்லை. மெயின் ரோட்டில் உள்ள கடையில் போட்டோம். அந்த கையில் இருந்து சம்பவ இடத்திற்கு எவ்வளவு தூரம் என்றால் அரை கிமீ இருக்கும். எடை போடுவதற்கு யார் எடுத்து சென்றோம் என்றால் அனைவரும் ஒன்றாக சென்றோம். அந்த கடையில் எடை போடும் தான் அந்த கவரில் இருந்த பொருளை பார்த்தோமா என்றால் சம்பவ இடத்திலேயே கஞ்ச என்று பார்த்துவிட்டோம். அந்த கஞ்சாவை நாங்கள் தனிதனியாக தான் அந்த கடையில் எடுத்தோமா என்றால் சரிதான். அந்த கடையில் உள்ள கவரை வாங்கி எடை போட்டோமா என்றால் சரிதான். கைப்பற்றுதல் செய்தபோது நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 2 கையொப்பம் செய்தேன். எதிரியிடம் இருந்து கைப்பற்றும் போது பொதுமக்கள் யாரும் சாட்சிக்கு வரவில்லை என்றால் நாங்கள் கேட்டோம் அவர்கள் வரவில்லை. நாங்கள் எதிரியை காவல் நிலையத்திற்கு அங்கிருந்து அழைத்து வந்துவிட்டோம் என்றால் சரிதான். எதிரியிடம் காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாங்கினோம் என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து நான் எந்த

பொருளையும் கைப்பற்றவில்லை என்றாலும், என்னுடைய உயர் அதிகாரி போட்ட வழக்கிற்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர், ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் தயார் செய்தார் என்றால் சரிதான். புள்ளி விவரத்திற்காக போடப்பட்ட வழக்கிற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை இரவு 03.00 மணிக்கு அழைத்து வந்தீர்கள் என்றாலும், அவர் மீது போடப்பட்டது பொய் வழக்கு என்றால் சரியல்ல.

Signature of Witness.